குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.54/2012

அ.சா.10

2025–ம் ஆண்டு ஜுலை 15–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 10–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜன் | தொழில் | |
| தந்தை பெயர் | பெரியசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.33 மணி,

Accused Sakthivel present. Advocate Mr.Thiyagarajan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2013 ஆம் தேதி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 07.01.2012 ஆம தேதி நான் ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, பாலசுப்ரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.17/2012 சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்பு, அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை காவல் ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. அ.சா.1 பாலசுப்ரமணியன் எழுத்து மூலமான புகார் கொடுத்தார் என்றால் சரி. மேற்படி புகாரை யார் எங்கு வைத்து எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.15 17:51:37 +0530

நான் புகாரை பெற்ற பின்பு சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரி. மேற்படி புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரி.

4. சம்பவம் 06.01.2012 ஆம் தேதி நடந்ததாக கூறியுள்ள நிலையில், இவ்வழக்கு புகார் 07.01.2012 ஆம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது, மேற்படி 1 நாள் காலதாமதத்திற்கான காரணத்தை புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரி. நான், அ.சா.1–ன் புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.42 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.15 17:51:41 +0530